V12 NO.9 Sep 1980

போகாது. ஆகையினால் எந்த நிலையை யடையினும் இறுமாப்புறாமல் அடக்கமுடையவனாயிருந்தால்—பல நன்மைகளை யடையலாம். தெய்வ சகாயமும் கிடைக்கும்.

(3) "நான் பூலோகத்தையும் சொர்க்கலோகத்தையும் விட்டுவிடுகிறேன். மோட்சம் எனக்குக்கிடைப்பதானால் அதையும் நான் விட்டுவிடச் சித்தமாயிருக்கிறேன். ஆனால் சத்தியத்தை மட்டும் விட்டுவிட மாட்டேன்"—என்று பீஷ்மர் தம்முடைய சிற்றன்னையாகிய சத்தியவதியிடம் கூறினார். ஆகையினால் சத்தியத்தை எந்த யோக்யனும் நழுவவிடமாட்டான்.

(4) கணவன் மனைவியைக்காக்கக் கடமைப்பட்டவன். அதனாலேயே அவனுக்குப் பர்த்தா என்கிற பெயர் ஏற்பட்டது. தன்னைக் காப்பாற்றுகிறபடியினால் மனைவி அவனுக்கடங்கி அவனுக்கு வேண்டிய உபசரணைகளைச் செய்கிறாள். கணவன் தன்னைக் காக்கவில்லையானால் அவள் எப்படி கணவனுக்கடங்கி அவனுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்வாள்? இது கடமை தவறுவதனால் வரும் தொல்லை. அவரவர் கடமையை அவரவர் தவறாமற் செய்து வந்தால் அவரவர்க்குரிய மரியாதையும் அவரவரைப் பின் தொடர்ந்து பெருமைக்குள்ளாக்கும். ஒரு நாயும் தன் எஜமானனுடைய வீட்டை இரவில் சரியானபடி பாதுகாத்தால்தான் பெருமையடையும். இன்றேல் தெருவில் அலையும்படியான கதியை யடையும். இதனை

நாம் பார்க்கிறோம். ஆதலால் 'கடமை கடமைப்பிடி' என்ற போதனையின்படி கடமையை முதலில் செய்து விடவேண்டும். குழந்தைகளாகிய நீங்கள் உங்கள் கடமைகளாகிய—பெற்றோர்க்கடங்கி நடத்தல், பெற்றோர்க்கு இதஞ் செய்தல், கல்வியிலே கருத்துடைய வராயிருத்தல், நல்ல நடவடிக்கைகளை மேற்கொள்ளல், ஆகிய இவைகளில் கவனஞ்செலுத்தி மேன்மைபெறப் பிரயாசைப்பட வேண்டுமென்றுணர்க.

(5) மனிதன் தன் வாழ்வில் சிலகாலம் சுகமாயும் சிலகாலம் கஷ்டப்படுகிறவனுயு மிருக்கிறனே காரணமென்ன?—முழுவதும் புண்யத்தையே செய்தவனும் முழுவதும் பாவத்தையே செய்தவனுமில்லை. இரண்டையும் கலந்தே செய்கின்றனர்; ஆதலினுலே தான் சுகம் கஷ்டம் இரண்டையும் மாறி மாறி அனுபவிக்கின்றனர்.

(6) மக்களாகிய நாம் சூரியனுலே சகல நன்மைகளையும் அடைந்துவருகிறோம். அதனுலேதான் பெரியோர்களாகிய பக்திமான்கள் இப்போதும் காலைமாலைகளில் சூரியனை நமஸ்கரிக்கிறார்கள்.

ஒரு சமயம் வசிஷ்டருக்குச் சூரியபகவானுடைய தரிசனம் கிடைத்தது. அவர் சூரியனைப் பின்வருமாறு துதித்தார்—"ஜனன மரண மில்லாதவரே, மூன்று லோகங்களுக்கு முதல்வரே, கிரகாதிபரே, மழைக்கு ஆதாரமானவரே, சிருஷ்டி கர்த்தாவே, உமக்கு நமஸ்காரம்.



ஞானநிதியே, சகல பிராணிகளுக்கும் அந்தராத்மாவே, உலகங்களுக்குத் தீபம் போன்றவரே, உலகத்திற்கு க்ஷேமத்தைத் தருபவரே, சுயம்புவே, ஆயிரங் கிரணங்களை யுடையவரே—உமக்கு நமஸ்காரம்.

பிரபஞ்ச உற்பத்திஸ்திதிலய காரணமானவரே, வேதசொரூபியே, பிரம்மவிஷ்ணு மகேசுவர சொரூபியாகிய உமக்கு நமஸ்காரம்"—

இப்படி மகரிஷியாகிய வசிஷ்டரும் துதித்து நன்மை யடைந்திருக்கிறபடியால், காலையிலும் மாலையிலும் சூரியனைத் தொழுவது பெரு நன்மைகளை அடைவதற்குச் சாதகமாகுமென்றுணர்க.

(7) அறிவுள்ள மனிதன் ஆபத்து வருவதற்கு முன்பே அதனைத் தடுக்க முயற்சி செய்வான். அவன் கஷ்டம் வந்தபோது வருத்தப்படமாட்டான். கஷ்டம் வரும் என்பதை முன்பே அறிந்து ஜாக்கிரதையெடுத்துக் கொள்ளாதவன் ஆபத்து வந்தபின் துக்கப்படுவான்.

(8) பாண்டவர்கள் வனவாசம் செய்தகாலத்தில் அநேக முனிவர்கள் தரும புத்திரரை வந்து கண்டு அவர்க்குத் தேறுதல் கூறிப் போயினர். அவர்களில் நாரதரும் ஒருவர். தரும புத்திரர் நாரதரை வணங்கி வேண்டிய உபசாரணைகளைச் செய்தபின் அவர் கூறிய நல்லுபதேசங்களை ஏற்றுக்கொண்டார்; அப்பொழுது நாரதரைப் பார்த்து, "சுவாமி,

(1) வேதங்கள் பயன்படுவதெவ்வாறு?
(2) பொருள் எப்படி பயன் படும்?
(3) மனைவி பயன்படுவதெப்படி?
(4) கல்வி கேள்விகள் எப்படி பயன் படும்"?

என்று நான்கு கேள்விகளைக் கேட்டார்.

நாரதர்—(1) அத்தியயனம் செய்து அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவதினால் வேதம் பயன்படும்—என்றார்.

(2) பாத்திரமறிந்து கொடுப்பதனாலும், தான் அநுபவிப்பதனாலும் பொருள் பயன் படும்—என்றார்.

(3) மக்களையீன்று இல்வாழ்க்கைக் குரியவைகளைச் செவ்வனே கவனித்து வருவதால் மனைவி பயன் படுவாள்—என்றார்.

(4) வணக்கத்தினாலும் ஒழுக்கத்தினாலும் கல்வி பயன்படும்—என்றார். அதாவது கல்வியில் மேம்பாடடைந்தவன் வணக்கமுடையவனாயும் ஒழுக்கமுடையவனாயுமிருக்கவேண்டுமென்பதாம்.

பிள்ளைகளே! நீங்கள் கஷ்டப்பட்டுக் கல்வியிலே பெரியவர்களானாலும் வணக்கமும் ஒழுக்கமும் தவறி நடப்பீர்களானால் அக்கல்வி பயன்படாதென்றுணர்வீர்களாக. தற்காலத்தில் ஆங்கிலம்படித்த பிள்ளைகளிலே பலர் முதலாவது தங்கள் தாய் தந்தையரிடம் வணக்கமாயிருப்பதில்லை. ஒழுக்கமென்பதே அவர்களுக்குத் தெரிவதில்லை. ஆசாரம் என்கிற சொல்லும் அவர்களுக்குத் தெரியாது.



உடம்பு முழுவதும் சோப்பு தேய்த்துக் குளிக்கிறார்கள். குளித்தவுடன் நேற்றும் அதற்கு முன்னாளிலும் அதற்கு முன்னாளிலும் கட்டியுடுத்து வேர்வையில் நனைந்த ஆடையைக் கூசாமல் உடுக்கிறார்கள். இப்படி அநந்தமுண்டு சொல்ல. ஒரு அநாசாரம் பொறுக்க முடியாததாயிருந்து வருகிறது. வாயில் கைவைத்து விரலைச் சூப்புகின்றனர் சிலர். சிலர் நகத்தைக் கடித்துக் கடித்துக் கைவிரல்கள் பார்வைக்குக் குஷ்டரோகியின் விரலைப் போலாகிற வரையிலும் அப்பாலுங்கூடப் பிரயாசைப்பட்டுக் கடித்துப் பலர் முன்னிலையில் துப்பி மகிழ்கின்றனர். இந்த அநாசாரத்தையெப்படி பொறுப்பது? இந்த அநாசாரம் வரவர அபிவிருத்தியாய் வருகிறதே யொழியக் குறையவில்லை.

பிள்ளைகளே! இந்த அநாசாரத்திற்குச் சிறிதும் இடங்கொடாதீர்கள்! பழக்கப்படுவீர்களானால் சாகிற வரையிலும் அது விடாதுங்களை. பழக்கம் விடாதன்றோ?

நல்ல பழக்கம் நன்மை தரும்
தீய பழக்கம் தீமை தரும்.

---

மான அவமானம் கருதாமல் ஈனஜீவனம் செய்பவர்களை மானமுடையார் நாயென மதிப்பர்.

கடவுளை நம்பு.

---

## எனக்குறவினர் யார்?

பல நூற்றாண்டுகளுக்கு முன் இந்திரபுரமென்றொரு பட்டினமிருந்தது. அந்தப் பட்டினத்தில் ஒரு பெண்ணரசியிருந்து அரசு புரிந்து வந்தாள். அந்நகரத்துக்கு ஒரு நாள் நடுப்பகல் வேளையில் ஒரு பெரியவர் வந்து ஒரு தெருவில் நுழைந்து ஒரு வீட்டு வாசலில் நின்று, "பவதி பிக்ஷாந்தேஹி" என்று கூவினார். அவ்வீட்டிலிருந்த பருதிமால் என்பவனொருவன் வெளியே வந்து பெரியாரை வணங்கி, வலம் வந்து வீட்டிற்கழைத்துச் சென்று வீற்றிருக்க வேண்டிக்கொண்டு அன்புடன் அமுது படைக்கும்படி செய்தனன்.

பெரியார் அவ்விளைஞனோடு பல விஷயங்கள் பேசினார். இளைஞன் பெரியாரிடம் ஈடுபட்டு அவரையே தன்னையாட்கொள்ள வந்த குருநாதன் என்று மதித்து அவர் அமுதருந்தியெழுந்தவுடன், அவரை வீற்றிருக்கச் செய்து சகல உபசாரங்களையும் செய்து மகிழ்வித்தான்; "ஐயனே, நான் உலகமாயையி லுழலாவண்ணம் தெளிவான ஞானம் பெற்றுய்ய அநுக்ரகம் செய்ய வேண்டும்" என்று வேண்டிக்கொண்டான்; கரங்கூப்பித் தொழுது காலில் விழுந்து எழுந்து—"என்னை யாளவந்த சிவமே!" என்றான்; "என்னைப் புனிதனாக்க வந்த புண்யமே!" என்றான். "என்னை அடி



யார் திருக்கூட்டத்திற் சேர்க்கவந்த அமலமூர்த்தியே" என்றான்; மீண்டும் அடிபணிந்தெழுந்தான்.

பெரியார் அச்சிறுவனிடம் கருணை கூர்ந்து, "அப்பா! நீ உன் விருப்பப்படி சிவஞானம் பெற்றுச்சிறப்புறுவாய்! ஈசன் திருவருளுதயம் காண்பாய்! விரைவில் இது கைகூடும்" என்று கூறி அவனைச் சற்று உற்று நோக்கியவண்ணமிருந்து பொட்டெனப் புறப்பட்டு வெளியே சென்று தெருவிலே நடந்து விரைவில் அவ்வூர் ஆலயஞ்சென்று அங்கொருபால் யோகத்திலமர்ந்தருளினார்.

பெரியார் தன்னைவிட்டுப் பிரிந்த க்ஷணமே, பருதிமாலும் அவரது தியான மயமானான்; ஓரிடத்திலமர்ந்தான்; அமர்ந்தவன் சிறிது பொழுதில் பேச்சுமூச்சில்லாதவனான்; சிலையெனத் திகழ்ந்தான்.

இப்படி பருதிமால் சமாதி நிலைபெற்றதைக்கண்ட அவனுடைய மனைவியும் தாயாரும் தந்தையும் மற்றும் ஒக்கலும் ஊராரும் உண்மையுணராமல் அவனை உன்மத்தனானதாகக் கருதினார்கள்; அதற்குக் காரணம் வந்து பிக்ஷையுண்டு போன பெரியாரெனத் தீர்மானித்தனர். ஆனால் பெரியாரின் பெருமை யுணராதவராயினர் அம்மூடர்கள்; ஆகையினால் உடனே சில போக்கிரிகளை யழைத்து அப்பெரியாரைத் தேடிப் பிடித்துக்கொண்டு வரும்படி யனுப்பினர்.

அவர்கள் ஊர் முழுவதுமலைந்து தேடிக்கடைசியில் ஆலயத்தில் ஒரு புறத்தில் அப்பெரியார் ஈசுவரத்தியானத்திலிருக்கக் கண்டனர். அவருடைய திவ்ய

தரிசனங்கண்டதும் போக்கிரியாகிய அவர்களுடைய மனநிலைமாறியது. உள்ளத்தில் அன்பு என்கிற அருங் குணம் விளங்கியது; பெரியாரிடம் தெய்வவிசுவாசம் பாராட்ட வேண்டுமென்கிற ஒரு சிறு போதம் உதயமாயது. ஆகவே அவர்கள் அப்பெரியார் திருவடியில் வெட்டுண்ட மரமே போல் விழுந்து எழுந்து துதித்தனர்.

பெரியார் தியான நிலை கலைந்து கண் திறந்தனர். தம் முன் கை குவித்த வண்ணம் சிலர் நிற்கக்கண்டு "நீவிர்யாவர்?" என, அவர்கள், 'சுவாமி தாங்கள் பிக்ஷையுண்ட வீட்டுப் பாலகன் உன் மத்தனாய்ப் போய் விட்டான். அவர்கள் வீட்டில் யாவரும் அது கண்டு துக்கப்படுகின்றனர்; தங்களை அழைத்து வரும்படி எங்களை யனுப்பினர். ஆதலின் புறப்பட்டு வந்தோம். தேவரீர் தயைசெய்து அவணெழுந்தருள வேண்டும்" என்று வேண்டிக்கொண்டனர்.

ஆகா என்னென்பது பெரியோரின் தரிசன விசேஷத்தை. பெரியாரைப் பலாத்காரத்திற் பிடித்து இழுத்துக் கொண்டு போகவந்தவரன்றோ இவர்கள் ?

பெரியார், கருணைக்கு இருப்பிட மானவர்களாதலால், உடனே எழுந்து அவர்களுடன் சென்று பருதிமால் வீட்டையடைந்தனர். அவரைக் கண்டதும், அங்கிருந்த மூடர்களிலே சிலர், "ஐயோ பெரியவராயிற்றே என்று உமக்கு அன்னமிட்டதற்குப் பயனோ இது? நல்லது செய்தீர் ! நல்லது செய்தீர் !! இப்பொழுது இன்னும் சிறிது நேரத்தில் இந்த வாலி



பன் எப்போதும் போல் சுறுசுறுப்புடையவனாக வேண்டும். இல்லையேல் உம்மை அரச சபைக்கழைத்துப்போய்த் தக்கதண்டனை செய்விப்போம்" என்றனர்.

பெரியார், புன்முறுவல் செய்த வண்ணம், "நல்லது அப்படியே செய்யுங்கள்" என்று கூறிப் பருதிமாலிடம் சென்று அவனை உற்று நோக்கி, அவன் சமாதியிலிருக்கிறான் என்பதுணர்ந்து, திருக்கண்ணருள் காட்டித் திருக்கரமுயர்த்தி, "பருதிமால்! பருதிமால்!" என்று விளித்தனர்.

அவ்வளவில் பருதிமால் நித்திரை தெளிந்தெழுந்தவன் போல் எழுந்து பெரியாரைப் பணிந்து, "வர வேண்டும் ! வரவேண்டும் !! வீற்றிருந்தருள வேண்டும்" என்று ஆசனமிட்டனன்.

பெரியார் ஆசனத்தமர்ந்தனர். யாவரும் அது கண்டதிசயத்தனர். பருதிமால் பெரியார்க்குச் செய்ய வேண்டிய உபசரணைகளை யெல்லாம் செய்துதொழுது துதித்தனுப்பினான். பெரியார் முன்போல் ஆலயத்துக்கேகி அங்கே தியான சமாதியுற்றனர்.

இந்த விநோதம் நடந்த சில வருஷங்களுக்கப்பால் பருதிமால் ஒரு நாள் இரவில் படுக்கையிற் படுத்து படுத்த அந்நிலையிலேயே சமாதி நிலை அடைந்து சவம் போலானான். அவனைக்கண்ட அவன் மனைவியும் அன்னையும் தந்தையும் மற்றும் யாவரும் இறங்


தனன் என்றே எண்ணிக் கோ எனக்கூவியழுது உற்றா ருக்கோலை போக்கி, சங்கு முழங்கச்செய்து உற்றார் வருகைக்கும் ஊரார் வருகைக்கும் எதிர்பார்த்திருந் தனர்.

இதற்குள் பெண்டுகள் பலர் கூடித் தூக்க நடன மாடி மாரிழவு கொடுத்து மயிரிழவு முடித்து ஒப்பாரி பாடி ஓயா மழையென அழுது புலம்பி அரற்றினர்.

இச்சமயத்தில் பெரியார் அவண் போந்தனர். எல்லோரும் ஆச்சரியத்துடன் பெரியவரைச் சூழ்ந்து கொண்டு, "சுவாமி, உங்கள் சீடனைப் பாருங்கள்! சிவ லோகப் பிராப்தி யடைந்தான்" என்றனர்.

பெரியார் அவர்களனைவரையும் நோக்கி, "உங்க ளில் யாரேனும் இவனுக்காக உயிரிழக்க ஆயத்தமா வீராயின் இவனை நான் எழுப்புவன்! என்ன சொல்லு கிறீர்கள்?" என்று கேட்டார்.

அங்கிருந்தாரில் மனைவி முதல் யாவரும் அது கேட்டு அதிசயமுற்றனர். அப்பால் பருதிமாலுடைய தாய் முன் வந்து, "என் செல்வன் பிழைப்பானானால், நான் எனதுயிரைத் தருவேன்!" என்றனர். பின் மனைவி முன் வந்து "என்னாதன் பிழைத்தாற் போதும், நான் என்னுயிர் தருவேன்; தவறாமல்" என்றனள். அப்பால் சகோதரன், தங்கை, தமக்கை, இன்னுமுள்ள யாவரும் முன் வந்து "நாங்களும் அப்படியே" என்ற னர்.



"சுவாமி, உங்கள் சீடனைப் பாருங்கள்! சிவலோகப் பிராப்தி யடைந்தான்" என்றனர்.

பெரியார், "நல்லது, நான் இப்போது எமதருமனைப் பூசிப்பேன்! பூசித்தபின் உங்களில் யாரையழைப்பேனோ அவர்கள் உங்களுயிரை இந்தப் பிரேதத்தின் முன் இழக்க மனவுறுதியுடன் முன்வரவேண்டும்." என்று கூறிச் சற்றுநேரம் பூசையிலிருந்து தூபதீபாராதனைகள் செய்து பின் அனைவரையும் நோக்கி, "இதோ இங்கே இறந்து கிடக்கும் இந்தப் பருதிமாலுக்காக யார் உயிரை இழக்கத் துணிவு கொண்டவர்? அந்தத் தியாக புருஷன் இதோ இந்த நிவேதனத்திற் கொஞ்சம் எடுத்துண்டாற் போதும். உடனே உயிர் போய்விடும். அப்பால் பருதிமால் உயிர் பெறுவான்" என்றனர்.

பெரியார் சொல்லி வாய்மூடு முன், 'தந்தை தாயை நோக்கினன்! தாயுமவனை நோக்கினள். தாரம் ஏங்கியொரு புறமேகினள். தங்கை தமக்கையர், தம் மக்களைத் தழுவிய வண்ணம் தலை குனிந்தனர்.

இவ்வாறு ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியில் தப்ப எத்தனித்தனரே ஒழிய ஒருவரேனும் முன் வரவில்லை. சற்று நேரத்திற்குள் கலைப்புண்ட எறும்பின் கூட்டம் போலும் பிரியும் சந்தைக்கூட்டம் போலும் பிரிந்து மறைந்தனர்.

அது கண்டு பெரியவர் சிறு நகைபூத்து, "என்னே உலகினர் உறவிருந்தவாறு" என்று கூறித்திருக்கண்ணருள்சாத்தி, "பருதிமால் எழுந்திரு! எழுந்திரு பருதிமால்" என்றனர்.

அக்கணமே பருதிமால் எழுந்தனன். எழுந்ததும் குருநாதன் திருவடி போற்றித்தொழுது 'கரங்கூப்பி ஞன். பெரியார் அவனுக்கு உலகம் சந்தைச்கூட்டம் என்பதை நன்குணர்த்தி 'பூத நீயலை பொறிகளுமலை யலைபுந்தி ஏது நீயலை இவற்றினை மயங்கியானென்னும் போத நீயலை யென்றிவை யனைத்தும் போக்கிச் சோதி யாகிய பிரமம் நீ,' என்று உபதேசித்து அவனை இல் லறத்துறவி யாக்கி மறைந்தனர்.

பிள்ளைகளே? உலகத்தில் உறவென்று சொல்லிக் கொள்வார் யாவரும் வாய்ப்பேச்சில் பரிதாபப்படுகிறவர் களைப் போல் நடிப்பார்களே யல்லது உண்மையில் அன்பு காட்டுவதருமை. அதனாலே தான் 'உற்றோ ரெல்லாம் உறவினரல்லர்' என்று உபதேசித்தார் பெரி யோர்.

பெரியோர்களே! உங்களுக்குத் துணையாக உங் களையே நம்பி நீங்கள் அறிவிலும் தேகவன்மையிலும் உயரும் வண்ணம் நாடோறும் முயற்சி செய்யுங்கள். முயற்சியால் முடியாத தொன்றில்லை. முயற்சிசெய்பவ ரிடமே தெய்வபலமும் சாரும். தெய்வபலமுடைய வர் பங்கே ஐயமுமிருக்கும்.

---

### மூவாயிரம் பவுனையுடைய பிச்சைக்காரி.

சமீபத்தில் பாரிசில் பிச்சைக்காரர்களைத் தொலைக்கும் பொருட்டு அவர்களை யெல்லாம் பிடித்தார்கள். கமிலோ என் னும் 67-வயதுடைய பிச்சைக்காரியைப் பிடித்துப் போலீஸ் ஸ்டேஷனில் சோதித்ததில் அவளிடம் மூவாயிரம் பவுன் மதிப்புள்ள நோட்டுகள் அகப்பட்டனவாம். அவளுக்கு மாஜிஸ்ட்ரேட் 15 நாள் தண்டனை விதித்துத் தொகையைத் திருப்பிக் கொடுத்து விட்டார்.

தமிழ்நாடு 2/11/80.

## குழந்தைப் பேச்சு

(அண்ணன் சோமாஸ்கந்தன், தம்பி தங்கைமார்களுக்குச் சொன்ன கதை.)

திருவாரூர் என்கிற ஊரில் தீனதயாளு என்கிற ஒரு வியாபாரி யிருந்தான். அவனுக்குக் கற்பலங்காரி என்ற பேர்கொண்ட மனைவி யிருந்தாள். அவர் களுக்கு, "இது எங்கள் பாபா, எங்கள் குழந்தை! எங் கள் கண்ணுட்டி! எங்கள் ராஜா! எங்கள் செல்வம்!" என்று கொஞ்சி யழைத்துக் குலாவ ஒரு குழந்தை கூடப் பிறக்கவில்லை. அதனால் அவர்கள் ஒரு கீரிப் பிள்ளையை வளர்த்தார்கள்.

கீரிப்பிள்ளைக்கு நாலு கால்களிலும் சலங்கை கட்டி யிருக்கும். கழுத்திலும் சலங்கை கட்டியிருக்கும். உடம்பில் வெல்வெட்டுச் சட்டை போட்டிருக்கும். அந்தச் சட்டையில் செமிக்குப்பூ அமைத்திருக்கும்.

அதுக்கு அவர்கள் குஞ்சுராஜா என்று பேரிட் டனர். குஞ்சுராஜா என்று கூப்பிட்டால் அது, கிலு! கிலு! கிலு! சல! சல! சல என்று சலங்கை ஓசைப்பட எங்கிருந்தாலும் அவர்கள் பக்கம் ஓடி வரும். அவர்கள் அதை யெடுத்து மடியில் வைத் துக்கொள்வார்கள்; என் கண்ணே! கண்ணுட்டியே வாடா கண்மணி வாடா என்று முத்தமிட்டுக் கொஞ்சு வார்கள்; அதுக்குப் பால் வைப்பார்கள்; புத்துருக்கு

நெய் விட்டுப் பிசைந்த பருப்பு சோறு போடுவார்கள்; பழங் கொடுப்பார்கள்—என்றான்.

இப்பொழுது சோமாஸ்கந்தனுடைய தங்கைகளில் விஜயம் என்பவள், "கொழுக்கட்டை தருவாளோ அதுக்கு?" என்று கேட்டாள்.

அதைக்கேட்டதும் யாவரும் கலகலவென்று நகைத்தனர். சோமாஸ்கந்தன், "உனக்கு அம்மா கொழுக்கட்டை தந்தாளோ இல்லையோ, அப்படி அதுக்கு அவர்கள் கொழுக்கட்டையுங்கூடத் தருவார்கள் தான். ஆனால் அது உன்னைப்போல் சமையிலுள்ளே போய் அம்மாவுக்கும் பாட்டிக்கும் ஒத்தருக்கும் தெரியாமல் எடுத்துத் தின்னாது. கொடுத்தால்தான் தின்னும். வயிறு நிரம்பிப்போச்சுன்னு வச்சுக்கோ, அப்பால் அம்மாகொடுத்தாலும் தின்னாது அப்பாகொடுத்தாலும் தின்னாது" என்றான்.

விஜயம்.—பாட்டி கொடுத்தால்—என்று கேட்டது. இதைக்கேட்டதும் எல்லோரும் சிரித்தார்கள். விஜயம் வெட்கப்பட்டுத் தலைகுனிந்தான்.

சோமாஸ்கந்தன்—"சிரிக்காதேயுங்கள்! விஜயத்துக்கு வெட்கம் வந்துவிட்டது. நாமும் விஜயத்தைப் போல் குழந்தையா யிருக்கும்போது இப்படித்தான் இருந்திருப்போம்" என்று கூறி விஜயம் என்று அழைத்து, "அந்தக் குஞ்சுராஜா பாட்டி கொடுத்தாக் கூடத் தின்னாது. அது சமர்த்து. வயிறு நிரம்பின



பிற்பாடு சாப்பிட்டால் வயிற்றுவலி வரும், என்று அதுக்குத் தெரியும்"—என்றான்.

இப்பொழுது, புவனம் என்கிற ஒரு தங்கை (இவள் மூவரில் பெரியவள்) "ஆமா அதுக்கு வயிற்றுவலி வருமென்று தெரியுமாக்கும்? தெரியாது. 'மீதூண் விரும்பேல்' என்று அது படித்திருக்கிறதோ?" என்றாள்.

சோமாஸ்கந்தன்.—படித்ததில்லை. படிக்காவிட்டாலும் அதுக்குத் தெரியும். அப்படிப்பட்ட புத்திசாலி அது—என்று மேலே சொல்வதற்குள் விஜயம், "அண்ணா, நம்ம தண்டுவைவிட அது பெரிதோ சிறிதோ?" என்று கேட்டது.

சோமாஸ்கந்தன்.—"அது தண்டுவைவிடச் சின்னதுதான். ஏன் கேட்கிறாயதை?" என்று கேட்டான்.

விஜயம்.—தண்டு எங்களையெல்லாம் விட உன்னையும் விடப் பெரியவனாப்போயும் பிள்ளையார் பூஜை அன்னைக்கு, சமையலுள்ளே போய் ஒத்தருமில்லாத போது கொழுக்கட்டை எடுத்துத்தின்னானே—அப்படி தின்னாது—இல்லே சமத்தோ இல்லையோ அது—என்றாள்.

சோமாஸ்கந்தன்.—அது அப்படி யெடுக்காது. கேள் கதையை நான் எதில்விட்டேன்—

ஹைமவதி.—(இன்னொரு தங்கை) குஞ்சுராஜாக்கு அதனுடைய அம்மா பழங்கொடுப்பாள்—என்கிற வரையில்—

புவனம்.—ஆமாம்—ஆமாம்—

சோமாஸ்கந்தன்.—விஜயம்—என்றான்.

விஜயம் "ஏன்"? என்று கேட்கவில்லை. சோமாஸ்கந்தன் "சரி, விஜயம் தூங்க ஆரம்பித்துவிட்டது. நாளைக்காகட்டும் சொல்லுகிறேன்" என்றான். கலைந்தனர். (வரும்.)

---

## உலக விரோதிகள்

தீனருக்குதவாத செல்வரும் வறிஞரும்
தீரநிக ரெங்குமுள்ள
தெய்வநிந்தையரு நாத்திகரு நிகர்வஞ்சருந்
தெளிவிலாதவரும் நிகாரம்
மானநற்பண்பு மக்கட்பேறிலாதவளும்
வலியமட் பாவையுநிகர்
வனமற்றகவியுநீர் வண்டுநந் தாருமவழி
மருவுறு பெழுத்துநிகராம்
கானகத்துறு கடும்புலியும் கொடுங்கோல்செய்
காவலரும் நிகர்பாலையும்
கனதான தருமமில்லாநாடு நிகர்மனக்
கனிவிலாரிடு மறுசுவைப்
போனகமும் வேம்புநிகர் நினைவணங்காருநீள்
புன்புலாடவனு நிகராம்
புனவள்ளி தெய்வயானைக்கு மணவாளனே
போரிவடிவேல் முருகனே.

(திருப்போரூர்ச் சதகம்.)

---

# The use of Time 4

## காலமும் அதன் உபயோகமும் 4

நம்முடைய மிகவும் அற்பமான வாழ்நாளில் நாம் அறிவிலும் குணத்திலும் நடத்தையிலும் மேம்பாடடையவும் அதனால் உலகுக்குபயோகமான அரிய பெரிய நற்கருமங்களைச் செய்யவும் காலத்தைச் சரியான வழியிலே உபயோகப்படுத்த வேண்டும். நாம் இப்படிப் பழகுவதனால் நாமே சந்தோஷமடைவதோடு பிறரையும் சந்தோஷப்படும்படி செய்கிறோம். காலத்தை வீணாகக்கழிக்கக் கூடாது என்னும் எச்சரிக்கையை மனத்திற்கொண்டு அதைச்சரியான வழியில் உபயோகிப்பதே காலத்தினலாகும் பயனையடைய ஏதுவாகிறது. குறிப்பிட்ட காலத்தில் அக்காலந் தவறாமல் குறிப்பிட்ட வேலையைச் செய்து முடிப்பதே பயனைத் தரும். ஒரு நாளில் அநேக காரியங்களைக் கவனிக்க வேண்டிய ஒருவன் முதல் முதலில் கவனிக்க வேண்டிய காரியத்தைக் குறித்த காலத்தில் தொடங்காமல் நேரஞ்சென்று தொடங்கினல் அன்று ஒவ்வொரு காரியமும் காலதாமதமாகவே முடியும். அதனல் அந்தந்தக் காரியங்களுக்காக ஏற்பட்டிருக்கும் இதர மனிதர்களுக்கும் அநேகவித இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. ஆனல் காலாகாலத்தில் காரியங்களைத் தொடங்குகிறவனே தன் காரியங்களை ஒழுங்காகக் காலத்தில் முடித்துக் கொள்வதுடன் பிறருக்கும் அநுகூலத்தைச் செய்தவ

னுகிறான். இன்று செய்யவேண்டியதை இன்றே செய்ய வேண்டும். நாளைச் செய்யலாம் மறுநாள் செய்யலாம் என்று காலந்தாழ்த்தும் வழக்கம் ஒருவனை, ஒரு காரியத்தை இந்தக் காலத்திற்குள் முடிக்கலாமென்னும் தீர்மானத்திற்கு வரமுடியாத ஆபத்திற் கொண்டுபோய்ச் சேர்க்கும். நாளையதினமும் நாளனன்றும் நம் கையிலகப்பட்டதில்லை. நாளைச் சந்தர்ப்பம் எப்படியிருக்குமோ' நமக்குப் பிரதிகூலமானாலும் ஆகும். அப்போது நாம் நினைத்த காரியத்தை நினைத்தபடி செய்து முடிக்க முடியாமற்போகும். நாளையதினத்தில் விசேஷமாறுதல் ஏற்படாமற்போனபோதிலும் இன்று நாளையதினமாயிருக்கிறது நாளை இன்றயதினமாகமாறுகிறது. நாளையதினம் செய்யலாம் மறுநாள் செய்யலாம் என்று காலந்தாழ்த்தும் பழக்கப்பிசாசின் கையிலகப்பட்ட ஒருவனுக்கு இன்றாகமாறும் நாளைய தினத்திலேயும் காரியத்தை முடிக்க முடியாமல் அதற்கு மறுநாள் அதற்கு மறு நாள் என்று தள்ளிக்கொண்டே போகும்படி நேரிடுமல்லாது அன்றே முடிக்கும் ஆற்றல் ஒருபோதும் ஏற்படாது. அதினும் கெட்ட வழக்கங்களைக் கைக்கொண்ட ஒருவன் அவைகளைக் கெட்ட வழக்கங்களென்று உணர்ந்து அவைகளைத் தவிர்க்க முயலுங் காலத்தில், இன்று நாளை என்று காலந்தாழ்த்தும் பிசாசின் வசமாய்விட்டால் அவனுக்கு நரகப் பிராப்தமுண்டாவது நிச்சயம். ஒருவனிடத்திலுள்ள கெட்ட வழக்கங்களை நிவர்த்தித்துக்கொள்ள வேண்டுமென்று கருதும் ஒருவன் லாங்பெலோ (Long fellow) என்னும்



மேனாட்டு மேதாவி சொல்லியுள்ளபடி 'To act in the living present' அன்று செய்ய வேண்டிய காரியத்தை அன்றே செய்ய வேண்டும் என்னும் தீர்மானத்தைக் கைக்கொண்டு அன்றே முடிக்க வேண்டும். அநேகர் மனோல்லாஸமான நாவல்களைப் படிக்க ஆரம்பித்து இரவு பகல் தெரியாமல் அதிலேயே ஆழ்ந்து வீணே காலங் கழிக்கிறார்கள். அநேகர் தினசரி வர்த்தமானப் பத்திரிகையை முதலிலிருந்து கடைசி வரையில் ஒரு அக்ஷரம் கூட விடாமல் ஞாபகத்தில் வைக்க முடியாததும், அநாவசியமானதுமாயுள்ள அநேக விஷயங்களை நாள் முழுவதும் படித்துக் கொண்டும் கழிக்கிறார்கள். அநேகர் ஒவ்வொரு நாளும் நாடகம் பார்க்கச் சென்று நேரஞ்சென்று வீடு திரும்பி மறுநாள் முழுவதும் நித்திரா தேவியின் வசம் தங்களை ஒப்பிவித்துக் காலத்தைக் கழிக்கிறார்கள். மற்றும் அநேகர் தாங்கள் வேலை செய்யவேண்டிய நேரத்தில் அநாவசியமாகத் தங்களுடைய நண்பர்களிடத்தில் பேசிக் காலங்கழிக்கிறார்கள். பொழுது போக்குவதில் மிதமாயிருந்தால் ஒரு கெடுதலும் உண்டாகாது. தவிரவும் வேலை செய்த களைப்பினால் ஏற்படும் ஆயாசம் தீருவதற்குச் சற்று ஓய்வு அவசியம் வேண்டும். ஓய்வு எடுத்துக் கொண்டு மறுபடியும் தேகத்தைச் சுறுசுறுப்பான வேலைக்கு ஆயத்தமாக்கிக் கொள்வதை விடுத்து ஓய்வு எடுத்துக் கொள்ளும் நேரத்தை மேலே சொன்னபடி செலவழித்துத் தேகத்திற்கு இன்னும் அதிகமான சிரமத்தைத் தேடிக் கொள்ளுகிறார்கள் அநேகர்.

காலத்தைச் சரியானபடி உபயோகப்படுத்த வேண்டுமென்றால் சகஜத்திற்கு மீறிச் சதாசர்வதா ஓய்வில்லாமல் உழைத்துக் கொண்டிருப்பதென்பதல்ல. உழைப்புக்குத் தக்கபடி ஓய்வும் வேண்டும். ஓய்வில்லாமல் ஒரே மூச்சாய் உழைப்பது எப்போதும் சாத்தியமல்ல. உலகத்தில் வேலை செய்யவேண்டிய நேரத்தையும் சோம்பேறித் தனமான வழியிலே கழிப்பவர்கள் தான் அதிகமாயிருக்கிறார்கள். ஓய்வில்லாமல் அதிக வேலை செய்வதும் கூடாது. கொஞ்ச வேலை செய்து அதிக ஓய்வு எடுத்துக்கொள்வதும் கூடாது. வேலையையும் ஓய்வையும் அளவுபடுத்தி வேலை செய்ய வேண்டிய நேரத்தில் வேலை செய்தும் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டிய நேரத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டும் ஒழுகுவதே காலத்தைச் சரியான வழியில் உபயோகப் படுத்துவதாகும்.

A. Gopalaratnam Ayyar.

---

## அற்புத கடிகாரம்.

ஜர்மன் ஆராய்ச்சி நிபுணர் ஒருவர் கண்டு பிடித்திருக்கும் நூதன கடிகாரம் ஒன்றினால் கும்பகர்ணனைப்போல, கடிகாரம் மணி யடித்தாலும் விழித்துக்கொள்ளாமல் தூங்குபவர்களையும் தும்பிக் கொண்டு விழித்தெழச் செய்யும் ஏற்பாடு செய்திருப்பதாய்த் தெரிகின்றது. குறித்த நேரத்தில் இக் கடிகாரத்திலிருந்து வெளிப்படும் ஒரு தோட்டா வெடித்து அதிலிருந்து ஒருவிதப் புகை வெளிக் கிளம்பி அந்த அறை முழுதும் பரவி விடுவதாயும், அப் புகையை சுவாசிக்கும் தூங்கும் மனிதன் உடனே தும்பிக் கொண்டு விழித்தெழ வேண்டியதாகி விடுவதாயும் தெரிகின்றது.

## ஆமை காட்டிய அறிவு

கல்கத்தாவில் மானிக்தோலா என்று ஒரு பஜாரிருக்கிறது. அந்தக் கடைக்கு, நல்ல குடும்பத்தைச் சேர்ந்த ஓர் இளைஞன் மாமிசம் வாங்குவதற்காகச் சென்ற ஆகஸ்டு மாதம் 23ஆம் தேதி சென்றான். அங்கே அப்போதுதான் அறுத்துப் போட்ட ஆமையின் மாமிசம் சுத்தப்படுத்தப்பட்டுப் பலகையின் மீது வைக்கப்பட்டிருந்தது.

இளைஞனுக்கு ஆமையின் மாமிசத்திலே அதிகப் பிரியமாதலால் அவன் அருகே சென்று அது நல்லதா என்று பார்க்கும்பொருட்டு அதனைக் கையினால் தடவிப் பார்த்தான். அந்த ஆமையின்தலை குற்றுயிராய்க் குதித்துக் கொண்டிருந்ததினால் அவனுடைய கைவிரல் அத்தலையின் அருகே செல்லவே அது அவனுடைய விரலைப் பற்றிக்கொண்டு இரத்தத்தை ஆத்திரத்துடனுறிஞ்ச ஆரம்பித்து விட்டது.

இதைக் கண்டு பலரும் திகைப்படைந்தனர். மற்றொரு பையன் தன் கத்தியால் ஆமையின் வாயைத் திறந்து அவனை அக்கஷ்டத்தினின்று விடுவித்தானாலும் அவன் உடனே மூர்ச்சையானான். விரல் பாதி போய் விட்டது. அவ்விளைஞனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர்.

அப்பால் அவனுக்கு ஜீவஹிம்சையின் கஷ்டந் தெரிந்தது. பட்டால்தானே தெரியும் கஷ்டத்தின்

கொடுமை! ஆடு கோழிகளை உயிருடனிருக்கும்போது வெட்டிக் கொன்று தின்பவர்கள் இதைக் கவனிப்பார்களாக?

விரல் ஆமையின் வாயிலகப்பட்டுக் கொண்ட போதும் அது துண்டிக்கப்பட்ட போதும் அவன் எவ்வளவு வருத்தமடைந்திருப்பான், அப்படித்தானே அந்த ஆமை உரிக்கப்பட்டபோதும் துன்பமடைந்திருக்கும்?

---

### தண்ணீருடன் கலந்துசென்ற பாம்பு

பூக்களை முகரும்போதும் தண்ணீரை அருந்தும்போதும் நம்மவர் மிகவும் ஜாக்கிரதையா யிருத்தல் வேண்டும். புஷ்பங்களில் நுண்ணிய கிருமிகள் இருக்கலாம்; அவை நுகரும்போதே நாசிகாத் துவாரங்களின் வழியாக உட்சென்று சிரசினில் பதிந்து பெருந் தொல்லையைக் கொடுக்கக்கூடும், அம்மாதிரியே தண்ணீரைப் பருகும் போதும் சிறிய நீர்ப் புழுக்கள் உட்புறஞ் சென்று வயிற்றிற் பல கோளாறுகளை உற்பவிக்கச் செய்யலாகும். இதற்கு உதாரணமாக: பிரான்சு தேசத்தைச் சேர்ந்த ஓர் கிராம வாசியான 55 வயதுள்ள ஓர் பெண்ணின் இரைக்குடலில் ஓர் விஷப் பாம்பு புகுந்து சில வருஷங்களாய் அதனுள் வளர்ந்து கொண்டிருந்தது. குறித்த பெண்ணானவள் இரண்டு மூன்று வருடங்களுக்கு முன் ஒரு நீர் ஊற்றில் தண்ணீர் பருகினாள். அந்நாட் தொடக்கம் அவளுக்கு வயிற்றிலே சிறிது தொல்லை உண்டாகி, அது படிப்படியாய் அதிகரித்து வந்தது. இப்படியிருக்க, அவள் ஓர் வைத்தியரைச் சந்தித்துத் தனக்குள்ள நோய்க் குணத்தைத் தெரிவித்தாள். அவர் ஓர் கண்ணாடி ஆயுதமூலம் அவளது உண்ணிலைமையைச் சோதித்துப் பார்த்து இரைப் பையுள் 20 அங்குல நீளமுள்ள விஷப் பாம்பு இருக்கிறதாகக் கண்டு பிடித்தார். மிகச் சிறிய ஓர் குட்டிப் பாம்பு அவள் ஆற்று நீரைக் குடித்தபோது அத்துடன் வயிற்றுக்குள் போய் பெரியதாய் வளரலாயிற்றென்பது அவரது நிச்சயம்.



ஆமை இளைஞனின் விரலைப் பற்றிக்கொண்டு இரத்தத்தை உறிஞ்சுதல்.

# மரணத்தின் மர்மம்.

மரணம் திடசரீரமுடையவனுக்கும் வருகிறது. பணக்காரனுக்கும் வருகிறது. நோயாளிக்கும் ஏழைகளுக்குந்தான் வருகிறதென்பதில்லை. இதனால் நாம் அறிவதென்ன? நன்றாய்க் கொழுப்பேறத் தின்றால் நீடித்த காலம் ஜீவிக்கலாமென்றும் மரணத்துக்குத் தப்பலாமென்றும் உறுதிகொள்வதற்கில்லை. ஆதலால் மரணம் நம்மாலே தடுத்துக் கொள்ள முடியாததாகிறது. தக்க மருந்துகளினாலும் போஷணையினாலும் மரணத்துக்குத் தப்பலாமென்று தற்கால நாகரிகர் நம்பிக்கைகொண்டு அதற்கேற்றபடி வாழ்க்கையில் பல மாறுபாடுகளைச் செய்து கொண்டு வருகின்றனர். அவர்களுக்குச் சமீபத்தில் பம்பாயில் நடந்த ஒரு சம்பவம் தக்கபடி அறிவுறுத்துவதாகிறது. பம்பாயில் ஸெயிண்டு ஜார்ஜ் என்னும் பெயர் கொண்ட ஓர் வைத்திய சாலையிருக்கிறது. அந்த வைத்திய சாலையில் ஜான் டெல்லிஸ் என்பவர் ஒருவர் கப ஜுரத்திற்காகச் சிகித்ஸை செய்து கொண்டார். நாளடைவில் அவர் இந்த ஜுரத்தின் கடுமை நீங்கிச் சௌக்கியமடைந்து எழுந்து நடமாடத்தக்க திடமுடையவரானார்.

அதே வைத்திய சாலையில் கிரேக் என்ற ஆங்கிலேய இந்தியர் ஒருவர், மலேரியா ஜுரத்தினால் சிகித்ஸைக்கு அவருக் கடுத்த படுக்கையிற் படுத்துக்

கொண்டிருந்தார். இருந்தாற்போலிருந்து கிரேக்கருக்கு 105 டிகிரி ஜுரம் கண்டது. அச்சமயம் அவருக்குப் புத்தி சுவாதீன மில்லாமற் போய் விட்டது. அதனால் அவர் தம்மைப் பிறர் தூஷிப்பதாக நினைத்துக் கொண்டு திடீரென்று படுக்கையி லிருந்தெழுந்து குதித்து அருகிலிருந்த தாதியைப் பிடித்து அப்பாலே தள்ளி விட்டு டெல்ஸிஸ் இருந்தவிடஞ் சென்றார். அச்சமயம் அவர் படுக்கையிலிருந்தெழுந்து உலாவிக் கொண்டிருந்தார். அவர் அருகே சென்ற கிரேக் அவர் வாயில் ஒரு குத்துக் குத்தினார். குத்தியதும் டெல்லிஸ் திடீரென்று இரும்புக் கட்டிலின் மேல் விழுந்தபடியால் அவர் தலையில் நன்றாயடிபட்டு எலும்பு நொறுங்கி விட்டது. உடனே அவர் பேச்சு மூச்சில்லாதவராய்ச் சற்று நேரத்தில் உயிர் துறந்தார்.

பிள்ளைகளே, பார்த்தீர்களா மனிதருக்கு மரணம் வரும் வழியை! ஆதலின் நம்முடைய ஜாக்ரதையில் இது தடுக்கப்படுவதன்று. இதனாலேதான் தைரிய முடைய வீரன் மரணத்துக்கு அஞ்சுவதில்லை. மரண மடைந்தவருக்காகவும் விசனப்படுவதில்லை.

திருவிளையாடற் புராணம் என்று ஒரு புராண முண்டு. அதனை ஆலாஸ்யமகாத்மியம் என்பர் வட நூலார். அதில் சிவபெருமானுடைய திருவிளையாடல்கள் அறுபத்துநான் கமைந்துள்ளன. அவற்றில் பழிஞ்சியபடலம் என்னும் ஒரு திருவிளையாடலில் சிவபெருமான் பாண்டியனுக்கு மரணத்தின் மர்மத்தை உணர்த்துகிறார். அந்த வரலாறு, மணமகனை மணப்



பந்தலில் மாடொன்று முட்டிக் கொல்வதாகக் கூறப்படுவது. அந்த வரலாறு நமது பால விநோதினியில் சென்ற சில ஆண்டுகளுக்கு முன்னே மரணத்தின் மர்மம் என்கிற தலைப்பில் வெளியாயிருக்கிறது. நீங்கள் படித்திருக்கலாம்.

அது மரணம் விதிப்படி நேரிடுவதென்பதையும் காரணம்-நோயோ, ஆபத்தோ ஏதோ, ஒன்றாயிருக்கும் என்பதையும், அது தடுத்தற் கரியதென்பதையும் விளக்கும்.

இப்படியிருக்கும் மரண ஆபத்தில் மோட்டார் என்கிற எமனால் ஏற்படும் ஆபத்தே தற்காலத்தில் அதிகமாயிருக்கிறது. 1920 ம் வருஷத்திலிருந்து கணக்குப் பார்த்ததில் மோட்டாரினாலடிபட்டவர்களுக்குச் சிகித்ஸை செய்ததில், சென்னை ஜெனரலாஸ்பத்திரியில் 30,000 ரூபாய் செலவாயிருப்பதாகத் தெரிய வருகிறது.

எவ்வளவு செலவு செய்துதானென்ன பயன்? ஜனங்கள் தற்காலத்தில் கருணையற்றவர்களாக மாறும்படியான நாகரிகம் பலத்து விட்டது. அதனால் அவர்கள் மோட்டாரில் ஏறியதும் கீழே நடமாடும் ஏழைகளும் தங்களைப் போன்ற மனிதர்களென்றே எண்ணாமல் வண்டியைக் காற்றிலும் வேகமாகச் செலுத்துகிறார்கள்; போலீஸ் தண்டனைகளை அவர்கள் பொருளினால் விலக்கிக் கொள்கிறார்கள். ஆகையினால் கடவுளே இவர்களைத் திருத்த வேண்டும். அப்பொழுது தான் இக் கொடுமை யடங்கும்.

பிள்ளைகளே, நம் மூதுரையில், குதிரையைக் கண்டால் பத்து முழமும் யானையைக் கண்டால் ஆயிர முழமும் துஷ்டர்களைக் கண்டால் அவ்விடத்திலே இராமலும் விலகும்படி சொல்லியிருக்கிறது.

அப்பொழுது மோட்டார் இல்லையாதலால் அதனைக் கண்டால் விலகுவதற்குரிய அளவு விதிக்கப்படவில்லை. குதிரையினும் யானையினும் மோட்டார் ஆபத்து விளைவிப்பதென்று தெரிகிறபடியால், வெளியிற் புறப்படும் போதெல்லாம் அந்த எமனை நினைவில் வைத்துக் கொண்டு ரஸ்தாவில் ஒரு பக்கத்தில் ஓரமாகவே பின்னும் முன்னும் பார்த்த வண்ணம் வெகு ஜாக்கிரதையாகச் செல்வதென்கிற விதியைக் கொள்வீர்களாக!

## அழகும் அறிவும் பெற்ற பெண்

சாதாரணமாக மாதர்களுக்கு அறிவும் அழகும் ஒன்றாகப் பொருந்தியிருப்பதில்லை என்று கூறுவது வழக்கம். அழகான பெண்களுக்கு அறிவு இருக்காது. அறிவான பெண்களுக்கு அழகு இராது. ஆனால் இங்கிலாந்தைச் சேர்ந்த ஸ்டாப் பர்டுஷைர் என்னும் பிரிவில் வசிக்கும் சுமார் 17-வயதுள்ள பெண்ணுக்கு இந்த இரண்டு லட்சணங்களும் பொருந்தியிருக்கின்றனவாம். அழகிக்காக நடைபெற்ற போட்டிகள் பலவற்றில் அப்பெண் முதன்மை பரிசு பெற்றிருக்கிறாள். அவ்வாறே அவள் பிரான்சு தேசப் புரட்சியைப் பற்றி ஒரு அழகான நாவலும் எழுதியிருக்கிறாள். இன்னும் பல நாவல்களையும் எழுத முயற்சித்து வருகிறாள்.

## ஈவது விலக்கேல்

கர்ணன் என்பவன் துரியோதனனுடைய நண்பன் அங்கதேச அரசன்; மகாபராக்ரமசாலி! நிகரற்ற வில் வீரன். அவன் பிறக்கும்போதே இரண்டு கவசங்களுடன் பிறந்தான். அவனை அவ்விரண்டு கவசங்களும் எப்படிப்பட்ட ஆபத்துக்காலத்திலும் பாதுகாத்து வந்தன. மேலும் கர்ணன் யார் எதைக் கேட்டாலும் இல்லையென்று சொல்லாமல் கொடுப்பதென்கிற ஒரு சிறந்த விரதமுடையவனாகவுமிருந்தான்.

இப்படியிருக்கையில் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் சண்டையுண்டாயிற்று. கர்ணன் கௌரவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவன். பாண்டவர்கள் அவனை வெல்ல அரும்பாடுபட்டார்கள். கர்ணனைக் கவசங்கள் காத்ததால் அவனை வெல்ல அவர்களால் முடியவில்லை. அதனால் கவலை கொண்ட அவர்கள், தங்களுக்குச் சகாயமாயிருந்த கிருஷ்ண பகவானிடம் ஆலோசித்தார்கள்.

கிருஷ்ணபகவான் எல்லாம் செய்யவல்ல இறைவனாகையால் அவர், பிராமணனாகச் சென்று கர்ணனிடம் கவசங்களை யாசிக்கும்படி இந்திரனை ஏவினார். இந்திரன் பிராமண வேடங்கொண்டு கர்ணனிடம் சென்று கவசங்களை யாசிக்கப் புறப்பட்டான்.

இச்செய்தி சூரியபகவானுக்குத் தெரிந்தது. அவர் கர்ணனுக்கு ஒரு வழியில் தந்தையாக வேண்டு

மாதலால், அவர் கர்ணனிடம் போய், அன்பாய் யழைத்து "அப்பா உன்னை ஏமாற்றி உன் கவசங்களைக் கவர்ந்து கொள்ள இந்திரனே ஒரு பிராமண வேடம் பூண்டு வருகிறான். நீ அவனிடம் இரக்கம்பாராட்டாதே!" என்று கூறித் தடுத்தார்.

கர்ணன், "ஓ இந்திரனா! வருகிறான்! வரட்டும்! சந்தோஷம்! இந்திரனே வந்து என்னிடம் யாசகம் செய்யும் போது நானேன் அவருக்கு என் கவசங்களைக் கொடுப்பது கூடாது! யார் எதைக் கேட்டாலும் இல்லை யென்று சொல்லும் வழக்கம் என்னிடம் இல்லை யென்பது தெரிந்ததாமே, இப்படி வந்து தடுப்பதாகுமா? நீர் தந்தையானாலும் நான் இச்சமயம் உம்முடைய சொல்லைக் கேட்க மாட்டேன்! நீர் சொல்வது நான் செய்து கொண்டுள்ள உறுதிக்கு விரோதமாகிறது. ஆதலால் உடன்பட மனம் இரங்க வில்லை" என்று மறுத்தான்.

சூரியபகவான் மனம் வெட்கி அவ்விடம் விட்டுச் சென்றார்; "நாம் இவனைத் தடுத்தது தவறு. 'ஈவது விலக்கேல்' என்று வசனம் ஏற்பட்டிருக்கிறதல்லவா? முன் மகாபலியிடம் மகாவிஷ்ணு வாமனராக வந்து மூன்றடி நிலம் கேட்டபோது அவனுடைய குரு சுக்ராசாரி தடுத்துக் கண்ணை இழந்தாரல்லவா? இப்படிப்பட்ட காரியத்தில் விவேகி தலை யிடுவது கூடாது" என்று எண்ணிக் கொண்டே தம்மிடம் போய்ச் சேர்ந்தார்.

பின் இந்திரன் பிராமண வேடத்துடன் கர்ணனிடம் வந்து கவசங்களை யாசித்தான். கர்ணன் பெருமகிழ்ச்சியுடன் அவனுக்குக் கவசங்களை யுதவி அவனை வணங்கினான். பின் பாண்டவர்கள் கர்ணனை எளிதில் வென்றார்கள். (சோமாஸ்கந்தன்.)

## வைத்திய விஷயக்குறிப்புகள்

சொத்தை நகம் ஒரு நோய். சர்வசாதாரணமாய்ச் சமையல் வேலை செய்யும் ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் இது வருகிறதுண்டு. புளி முதலிய அமில பதார்த்தங்களைக் கையாளுவதினாலேயே வருகிறது. சொத்தை விழுந்து நகம் ரணமாயிருக்கும்போது டிங்சர் அயோடீன் தடவினாலும், சதுரக்கள்ளியின் பாலைத் தடவினாலும் குணப்படும்.

நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், தேங்காயெண்ணெய், இலுப்பெண்ணெய், கடலையெண்ணெய் முதலிய எத்தனையோ எண்ணெய்களிருந்தாலும், 'நல்ல' என்ற பேர் எள்ளிலிருந்து எடுக்கும் தைலத்துக்கே கொடுக்கப்பட்டுப் பிரஸித்தமாய் நல்லெண்ணெய் என்று விளங்குகிறது. இந்த நல்லெண்ணெயின் குணம் மஹா விசேஷமானது, பதார்த்தகுண சிந்தாமணிக்காரர் இதைப்பற்றிக் கூறியிருக்கும் செய்யுள் காண்க:—

'புத்தியனல் குளிர்ச்சி பூரிப்பு மெய்ப்புளகம்
சத்துவம் காந்தி தனியிளமை— மெத்தவுண்டாம்
கண்ணோய் செவிநோய் கபாலவழல் காசமிவை
புண்ணோய்போம் எண்ணெயாற் போற்று"

ஆகையால் இந்த எண்ணெயைத் தேய்த்துத் தலை முழுகிவந்தால் மேலேகூறிய ஸுகத்தை யடையலாம், இந்தக் காரணத்தைக் கொண்டே "வைத்தியனுக்குக்

கொடுக்கும் காசை வாணியனுக்குக் கொடு" என்று நம்முடைய முன்னோர்கள் கூறுகின்றார்கள். ஆகையால் நல்லெண்ணெயை நமது தேசத்திலுள்ள எல்லோரும் வாரம் இருமுறை தேய்த்து முழுகி வந்தால் எந்த வியாதிக்கும் பயப்பட வேண்டியதில்லை. 'சனி நீராடு' 'சனி புதன் நீராடு' என்ற பழமொழிகளும் இதற்காகத் தான் கூறப்பட்டிருக்கின்றன. பம்பாயில் ப்ளேக் வியாதி வந்த காலத்தில் நல்லெண்ணெயைக் கையாண்டு கொண்டிருந்த வாணியத் தெருவில் அந்த நோய் பரவவில்லை என்று ஓர் இங்கிலீஷ் டாக்டர் வெகு உறுதியாய்ச் சொன்னதாக நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

பித்த வெடிப்பு சாதாரணமாய்ப் புருஷர்களுக்கு வரும் வியாதி. இப்போது ஸ்திரீகளுக்கும் முக்கியமாய் கிராமத்து ஸ்திரீகளுக்கும் வந்து கொண்டிருக்கிறது. புருஷர்கள் பாதரக்ஷை அணிவதனாலே அநேகமாய் அந்நோயைத் தடுத்து விடலாம். இந்நோய்வந்த ஸ்திரீகள் பாதங்களைக் கொஞ்சகாலம் நீரில் ஊற வைத்து நன்றாய்த் தேய்த்து அலம்பி ஈரமில்லாமல் நன்றாய்த் துடைத்துப் பின் சொல்லும் மருந்துகளில் எதையாவது உபயோகிக்கலாம்.

1. அரசம்பாலைத் தடவலாம்.
2. செம்முள்ளியின் இரசத்தைப் பிழிந்து தடவலாம்.
3. முந்திரி எண்ணெய் தடவலாம.
4. விளாம்பட்டைத் தைலம் பூசலாம்.

நமது சகோதரர்களும் சகோதரிகளும் காதிலிருக்கிற மெழுகை நீக்க ஈருக்குச்சியால் அடிக்கடி



காதைக்குத்திப் புண்படுத்தி வருகிறார்கள். அதனால் பெரும் ஆபத்தாய் முடிகிறது. காதில் குரும்பை அடைந்திருந்தால் அது நமது கண்ணுக்கே புலப்படும். இராத்திரிப் படுத்துக்கொள்ளும் பொழுது இரண்டு சொட்டு கிளிசிரீனைக் காதில் விட்டுக் கொண்டு காலையில் எழுந்திருந்து பீச்சாங்குழலால் வெந்நீர் ஏந்திப் பீச்சினால் காதிலிருக்கிற அசுத்தம் வந்து விடும். பிறகு இரண்டு சொட்டு கிளிசிரீனைக் காதில் விட்டுக் குளிர்ந்த காற்று உள்ளே போகாமலிருக்கும்படி பஞ்சு வைத்து அடைத்துக்கொள்ளவும். இப்படி இரண்டு நாள் செய்யக் குணமாய் விடும்.

## மோல்மீனில் மயிர் மழை.

சமீபத்தில் பர்மாவில் நடைபெற்ற கொடிய பூகம்ப விபத்திற்குப் பின்னர் பயங்கர இடியோசை மின்னல்களுடன் மோல்மீனில் ஒரு பெரிய மழை பெய்தது. மழை பெய்த நேரம் காற்றும் பலமாக வீசியது. இரவு முழுவதும் எங்கும் மையிருட்டாயிருந்தது. மறுநாட் காலையில் நகர் முழுவதும் பன்றி உரோமங்கள் சாலையில் வருஷிக்கப்பட்டிருந்தன. வெள்ளையும் சிகப்புமாகக் காணப்பட்ட அவை ஒவ்வொன்றும் சுமார் இரண்டு மூன்று அங்குல நீளமிருந்தன. நூற்றுக்கணக்கான பர்மியக் குழந்தைகள் இந்தப் பொறுக்கினார்கள். பர்மியர்களுடைய கொள்கைப்படி மழை தேவதை நீண்ட சிறகுள்ள ஒரு குதிரையின்மீது மழை பெய்யும்போது ஆகாயத்தில் பறந்து செல்வதாகவும் அத் தேவதை அடிக்கும் அடிகளே மின்னலாகத் தெரிகின்றதென்றும் அடி பொறுக்காமல் குதிரையின் ரோமங்கள் உதிர்வதாகவும் அவற்றைப் பொறுக்கிச் சேர்ப்போருக்கு ஐஸ்வர்யம் பொங்குமென்றும் கூறப்படுகிறது. சில விடங்களில் மச்ச மழை, நண்டு மழை, தவளை மழை முதலியனவும் பெய்திருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

# சொப்பனம் பலித்த விந்தை

ஹாம்ப்ஷயர் நகரில் பிறந்து வளர்ந்த ஸ்ரீமதி. ஜில்சிரோஸலி என்ற பெண் சிறு பிள்ளையா யிருக்கும் போதே ஆப்பிரிக்கா ஆரண்யங்களிலுள்ள கொரில்லா என்ற வாலில்லாக் குரங்குகளைப் பற்றியும், நர மாமிச பக்ஷிகளான காப்பிரிகளைப் பற்றியும், அடிக்கடி சொப்பனங்களைக் கண்டு வருவாள். ஆதலால் இவ்வுலகத்தைச் சுற்றிப் பிரயாணஞ் செய்ய வேண்டுமென்ற ஆசை அவளுக்குண்டாயிற்று. அவள் 10 வருஷ காலமாக இவ்வுலக முழுவதும் சுற்றிப் பிரயாணஞ்செய்த பின் சென்ற மாதம் 12ந் தேதி யன்று இங்கிலாந்தில் வந்து சேர்ந்தாள். இம் மாதரசி தன் யாத்திரையை பத்திரிகைக் காரரிடம் பின் வருமாறு விவரித்தாள்:—நான் அநேக ஆயிரம் மைல் இவ்வுலகில் சுற்றிப் பார்த்தேன். தென் ஆப்பிரிக்காவிலும் ஆஸ்ட்ரேலியாவிலும், தட்சண சமுத்திரங்களிலும், இந்தியா, சீனா, ஜப்பான் ராஜ்யங்களிலும், அமெரிக்க ஐக்கிய மாகாணம், கானடா தேசங்களிலும், சென்று சகல இடங்களையும், தரிசித்து மனிதர் இது வரையில் கண்டு பிடித்திராத ஆரண்ய நிலபாகங்களைத் துணிகரமாய்ச் சென்று பார்த்தானந்தித்தேன்.

பிரயாணஞ் செய்து நிறம் வேற்றுமை யடைந்தது. இளம் பிராயத்தில் கண்ட சொப்பனங்கள் சரியாக நிறைவேறின. அநேக கொரில்லாக்களைக் கண்டானந்தித்தேன். நர மாமிசங்களை யருந்தும் காப்பிரிகளோடு அன்புடன் பேசிக்கொண்டிருந்தேன். களாஹரி யென்ற காட்டுக்கும் போனேன். ஜெர்மானிய மாஜி கெயிசர் வேட்டையாடின காட்டைப் பார்த்தேன். காப்பிரிகளோடிருந்து போஜனம் அருந்தினேன். அவர்கள் என்னைக் கொன்று சாப்பிட விரும்பவில்லை. அவர்களுக்குள் பிளேக் கொள்ளை நோய் பரவவே நானே இந்தக் கொள்ளை நோயைக் கொண்டு வந்து விட்டேனென்று நினைத்துக் என்னைக்கொன்று விடுவார்களோ வென்று பயந்து ஓடி வந்து விட்டேன். தங்கநாயிக்கா என்ற ஏரியின் சமீபத்தில் மரங்களடர்ந்த ஒருகாட்டில் ஆறடி உயரமுள்ள ஒரு கொரில்லாவோடு நான் போராட நேரிட்டது. அந்த வாலில்லாக் குரங்கு எங்கள் கூட்டத்தாரை எதிர்த்தது. சாதாரணமாக கொரில்லாக்கள் மாதர்களைத் தாக்குகிறதுமில்லை, கொல்லுகிறதுமில்லையென்று கேள்விப்பட்டிருக்கிறேன். என்கூட வந்த வாலிபர்கள் அதை வாள்களால் வெட்டி அதன் தோலை யுரித்துக் கொண்டு போனார்கள்.

அதன் பின் ஆஸ்ட்ரேலியாவுக்குப் போனேன். அதன் பூர்வீகக் குடிகள் தங்கள் புதல்வியரை விவாகஞ் செய்து கொடுக்குமுன், மணவாளர்கள் நல்ல புஜபல பராக்கிரமமுடைய வீரர்களாவென்று பரீட்சித்த பிற்பாடு திருப்தியடைந்தால்தான் விவாகம் பண்ணிக் கொடுக்கச் சம்மதிப்பார்கள். அதன் பின் தென் திசை சமுத்திரத்திலுள்ள தீவுகளைப் பார்க்கப் போனேன். அத்தீவுகளின் அரசர் டோங்கா என்ற நகரில் என்னை அன்போடு உபசரித்தார். எனக்குச் சந்தோஷமுண்டாக அரசர் நாட்டியப் பெண்களை வரவழைத்து விசித்திர நடனங்கள் ஆடும்படி செய்வித்தார். அதன் பின் ஜப்பானுக்குப் போனேன். அங்கே பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு உறுதிபயக்கத்தக்க கல்வி யறிவூட்டிப் பயிற்றுவித்து வருகிறதைக் கண்டு வியப்புற்றேன்.

(தமிழ்நாடு.)

## (5) முத்துத்தாண்டவர் கீர்த்தனம்.

இராகம்—நீலாம்புரி தாளம்—திரிபுடை.

பல்லவி

சிற்சபைதனிலே கண்டு கொண்டேனென்றும்

அநுபல்லவி

அற்புதக் கூத்தனை நாடி—அவனியெங்குந்தேடி (சிற்)

சரணங்கள்

1 வையந்தருஞ் சிவகாமிமாலே கொன்றை மாலே
யென வணிந்தானை
மாந்தர்க்கு முன்னாலே செய்யுநாள் வாசனையின்
மேலே கடற்
றிரையெனவே வரும் பிறவி தீரும்
வகையாலே—(சிற்)

2 அடியவருக்கருள் புரிகுவானைப் பண்டு-வரி
பூனைக் குவந்துடன்
சக்கர மளித்தோனைத்—துடியிடையாள் மலை
மகள் பங்கோனை
அன்பாய்த் தொழுவார்க்குக் கதிகொடுக்கும்
தாய வெளியானைச் (சிற்)

3 தேவர்வான் கோனயன் மாலாதி—மெய்ம்மை
திகழ் மூவாயிரவரின்
நானொருவ னென்ற நீதி மூவர் பாடற் கருள
நாதி வந்து
மூவுலகுந் தொழத்தில்லைதனில் நடனஞ்
செய் ஜோதி—(சிற்)



4 முனிவர் புரிதவம் மகிழ்ந்தே யன்று—இன்ப
முடிவிலா வருளளித்த முதலே நாமென்று
தனியே நீ யறிதி யெனவின்று—நின்ற
சாக்ஷியைக் கண்ணுற் கனகசபை அருகே நின்று
(சிற்)

(வரும்)

---

### உலக விரோதிகள்

வைத்ததனை வயிறெரியவே கண்டபேர் வீண்
வழக்குத் தொடுக்கு முதியோர்
மானமெய்ஞ்ஞானியை இகழ்ந்த பெரியோர் பிறர்
வளம் பொறுக்காத செல்வர்
கொத்தவிழ் மலர்ப்பொழிலே வீழ்த்தும் அறவோர்
கொலே தனக்கியைந்த நண்பர் [கொடுங்
குருதந்தை தாயண்ணல் உபகாரி இவர் கடன்
குறை முடிக்காத வலியர்
சத்திர மடங் கோயி லாதிய நடத்திடும்
தருமம் தடுக்கும் நெறியோர்
சாமிநின் கருணை யறியாத மருடப்போலி
சகலர்க்கு மபகார ரெலாம்
பொய்த்தவிவருள வருந்திக் கெடுவரெனத்த
போதனர் விதித்தவிதியாம்
புனவள்ளி தெய்வானைக்கும் மணவாளனே
போரி வடிவேல் முருகனே
(திருப்போரூர்ச்சதகம்.)

## நடராஜப் பத்து

(முன் தொடர்ச்சி)

தாயாரிருந்தென்ன தந்தையுமிருந்தென்ன
 தன் பிறவி யுறவு கோடி
தனமலை குவித்தென்ன தன்பெயரெடுத்தென்ன
 தாரணியை யாண்டு மென்ன
சேயர்களிருந்தென்ன குருவாய்த் திரிந்தென்ன
 சீடர்களிருந்து மென்ன
சித்துபல கற்றென்ன நித்தமும் விரதங்கள்
 செய்தென்ன நதிகளெல்லாம்
ஓயாது மூழ்கினு மென்ன பலன் எமனோலை
 யொன்றினைத் தடுப்பதற்கிங்
குதவுமோ இதுவெலாம் சந்தையுற வென்றுதான்
 உன்னிரு பதம் பிடித்தேன்
யார் மீதிங்குன் பார்வை யிருந்தாலு முன் கடைக்
 கண் பார்வையது போதுமே
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
 தில்லை வாழ் நடராஜனே (9)

இன்னமும் சொல்லவோ உன் மனங்கல்லோ திண்
 ணிரும்போ கருப்பாறையோ
இருசெவியு மந்தமோ கேளாது மந்தமோ
 இதுவுனக்கும் பெருமையோ
என்னன்னை மோகமோ இதுவென்ன கோபமோ
 இதுவேயுன் செய்கைதானோ
என்றுமன மிரங்குமோ அன்றுபுர மூன்றட்ட
 ஈசனே யநாதிமுதலே
உன்னை விட்டெங்கு சென்றாலும் விழலாவனன்
 உனையடுத்துங் கெடுவனோ
ஓகோவிதின் குற்றமொன்று மிலைஐயனே
 உலகுயிரளித்தவரனே



என் குற்றமாயினும் உன் குற்றமாயினும்
 இனியருளளிக்க வருவாய்
ஈசனே சிவகாமிநேசனே யெனை யீன்ற
 தில்லை வாழ் நடராஜனே (10)

சனிராகு கேது புதன் சுக்ரன் செவ்வாய் குரு
 சந்திரன் சூர்யனிவரை
சற்றெனக் குள்ளாக்கி ராசிபனி ரண்டையும்
 சமர்ப் நிறுத்தியுடனே
யனியொத்த நக்ஷத்திரங்களிருபத்தேழும்
 பக்குவமாக்கி யப்பால்
பகர்கின்ற மரணங்கள் பதினொன்றையும் வெட்டி
 பாரையுமதட்டி யென் முன்
கனிவுபோல் பேசியே கெடு நினைவு நினைக்கின்ற
 கசடர்களையுங் கசக்கி
கர்த்தனின் தொண்டராந் தொண்டர்க்குத் தொண்
 தொண்டர்தம் தொழும்பனுக்கி [டரின்
இனிய வளமருவு சிறு மணவை முனிசாமி யெனை
 யாள்வதினியுன் கடன் காண்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
 தில்லைவாழ் நடராஜனே. (11)

முற்றும்.

இப்பதிகம் சமீபத்தில் இருபது வருஷத்துக்கு முன் காலஞ்சென்ற சிறுமணவூர் முனிசாமி என்பவரால் இயற்றப்பட்டதென இந்தக் கடைசிப் பாட்டினால் அறிகிறோம். இவர் சிறந்த சுப்ரமண்ய பக்தர். நினைத்த மாத்திரத்தில் கவிசொல்லவல்ல நிபுணராய் விளங்கியவர். இவர் சிறு நூல்களி லநேகமும் பெரு நூல்களில் பலவும் இயற்றியுள்ளார். அவர் இயற்றிய நூல்கள் இவருடைய சந்ததியாரால் அச்சிடப்பட்டு விற்பனையாய் வருவதாக அறிகிறோம்.

# அதிக ஆசை அதிக நஷ்டம்

370-ம் பக்கத் தொடர்ச்சி.

'கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லையே' என்று, தன் நண்பனை நம்பி மோசம்போன குமரேசன், வாழ்க்கைத் துணையாகிய தன் மனைவியுடன் இரவு வெகுநேரம் வரையில் வருத்தப்பட்டுக்கொண்டிருந்துவிட்டு நித்திரை பிடியாமல் விடியற்காலம் எழுந்து வழக்கம்போல் வயலுக்குப் போனான். தன் வயலுக்கருகில் போனதும் அவன் கால் தடுக்கிக் கீழே விழுந்தான்; சற்று நிதானித்து மெள்ள எழுந்து தன் காலில் தென்பட்டது யாதென்று உற்று நோக்கினான். அது ஒரு மூட்டை. அதை அவன் புரட்டிப்பார்த்தான். அது மிகவும் பளுவாக இருந்தது. அதனால் அவன் அவ்விடத்திலேயே உட்கார்ந்து அதை அவிழ்த்துப் பார்த்தான். அதில் ஒரு குடமும் குடத்திற்குள் மோகராக்களும் இருக்கக் கண்டான்; மனத்தில் சந்தோஷங் கொண்டான்; இங்கு இது வரவேண்டிய காரண மென்னவென்று நினைத்து மறுபக்கம் திரும்பினான். பக்கத்தில் ஒரு மனிதன் படுத்திருப்பது தெரிந்தது, திடுக்கிட்டான்; தூங்குகிறானோ வென்று யோசித்தான்; "இந்த மூட்டை இவனுடைய தாகத்தா னிருக்கவேண்டும். அயர்ந்து நித்திரை செய்கிறான் போலிருக்கிறது. மோகராவா யிருந்தாலென்ன? ஒருவன் தூங்கும்



போது அவனுடைய சொத்தை மற்றொருவன் அபகரிப்பது திருடர்கள் செயலல்லவா! திருடுவதைப் பஞ்சமா பாதகங்களி லொன்றாகவல்லவா சேர்த்துக் கண்டித்திருக்கிறார்கள் பெரியார்கள்.! ஆகையால் இவனை எழுப்பி இந்த மூட்டை இவனுடையதா வென்று விசாரித்து இவனுடையதானால் இவனிடம் கொடுத்துவிடுவதுதான் நம்போன்றவர்களுக் கழகு. நேற்றுக் கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லையே! அப்படி யிருக்க ஒருவன் நித்திரை புரியும்போது அவனுடைய சொத்தை யபகரிப்பதுதானா நிலைக்கப்போகிறது?" என்று கருதி அங்கேகிடக்கும் முத்தையன் சவத்தண்டை போய் "அண்ணே, அண்ணே" என்று கூப்பிட்டான். அவன் பேசவில்லை. தட்டி எழுப்பினான். அதற்கும் பேசவில்லை; அயர்ந்து தூங்குகிறான் என்று மதித்து அவனைப் புரட்டிப் புரட்டி எழுப்பினான். அப்படியும் அவன் எழுந்திருக்கவில்லை. "ஓ! இவன் இறந்துவிட்டான்போ லிருக்கிறது. இவன் கால்தடுக்கி விழுந்து படாத இடத்தில் பட்டு இறந்திருக்கவேண்டும். அல்லது ஏதாவது விஷஜந்து தீண்டி யிறந்திருக்கவேண்டும். தர்ம சங்கடமாகவல்லவா வந்து முடிந்தது! நாம் இதை இப்போது வீட்டிற்கு எடுத்துக்கொண்டு போவதா? அல்லது மற்றொருவனுடைய சொத்து நமக்கு வேண்டியதில்லை யென்று இவ்விடத்திலேயே போட்டுவிட்டுப் போய்விடுவதா?" என்று யோசித்தான்—"விட்டு விட்டுப் போவது பிசகு—உடையவனோ இறந்து விட்டான். நாம் எடுத்துக்கொண்டு

போகாமற் போனால் இவ்வழியே வரும் வேறு யாராவது எடுத்துக்கொண்டு போய் விடுவார்கள். ஆகையால் நாம் இதை இப்போது எடுத்துக்கொண்டு போய் நம்வீட்டில் வைத்திருந்து, விடிந்தவுடன் இறந்தவன் யாரென்று விசாரித்து அவன் வீட்டாரிடம் கொடுத்துவிடலாம்'' என்று யோசித்து மூட்டையை எடுத்துக்கொண்டு குமரேசன் தன் வீட்டிற்குப் புறப்பட்டான்.

குமரேசன் வீடு வந்து சேர்ந்ததும் மூட்டையைத் தன் மனைவியிடம் கொடுத்து நடந்ததைச் சொன்னான். குமரேசன் மனைவி நல்ல குணவதி—சமயோசிதமான புத்தியுள்ளவள். தன் புருஷன் சொன்ன விவரத்தைக் கேட்ட அவள் "இது தாங்களும் முத்தையனும் நேற்றுப் பார்த்து விட்டுவந்த புதையலாகத் தானிருக்க வேண்டும்—முத்தையன் தங்களை வஞ்சிக்கும் பொருட்டு அதை எடுத்து வேறிடத்தில் ஒளித்து வைத்துவிட்டுத் தங்களிடம் யாரோ எடுத்துக்கொண்டு போய் விட்டதாக ருசுப்படுத்தி விட்டு விடியற்காலம் தான் மாத்திரம் தனியே அதை எடுக்கப் போயிருக்கவேண்டும். அப்போது அவனுக்கு ஆபத்து நேர்ந்திருக்க வேண்டும். வேறு ஒருவரிடத்திலும் இப்புதையல் கிடைக்க நியாயம் இல்லை. நம்மை வஞ்சித்த முத்தையனுக்கு ஆபத்தை விளைவித்துப் புதையலை நமக்கு ஆண்டவன் உதவியிருக்கிறார் என்று எனக்குத் தோன்றுகிறது'' என்றாள்.

குமரேசன், ''நீ சொல்லுகிறபடிதான் நடந்திருக்க வேண்டும். விடிந்து விட்டது. நான் அது யார் என்று



பார்த்து வருகிறேன். பிறகு யோசித்துக் கொள்வோம்' என்று சொல்லி மறுபடியும் முத்தையன் இறந்து கிடக்கும் இடத்திற்கு வந்தான்—வரும் வழியில் காடன் குத்துண்டு குத்துயிராய்க் கிடந்ததைக்கண்டு அவன் பால் இரக்கங்கொண்டு கொஞ்சம் பச்சை ஜலம் கொண்டு வந்து அவனுக்குக் குடிக்கக் கொடுத்துச் சற்றுக் களைதெளிவித்து அவன் குத்துண்டு கிடப்பதற்குக் காரணம் கேட்டான்—காடன் தாங்கள் திருடப்போனது முதல் தான் குத்துண்டவரையில் எல்லாவற்றையும் சொல்லி முடித்ததும் மறுபடியும் மூர்ச்சித்தான்—காடன் சொன்னதிலிருந்து புதையலை அவனிடமிருந்து வேறு ஒருவன் பிடுங்கிக்கொண்டு போயிருக்க வேண்டுமென்றும் அவனிடமிருந்துதான் அது தனக்குக் கிடைத்திருக்க வேண்டுமென்றும் கருதி அவனைத் தேடிச்சென்றான். சற்றுதூரம் சென்றதும் முத்தையன் பிணமாகக் கிடப்பதைக் கண்டான். ஆச்சர்யப்பட்டான்—தான் புதையலை யடைந்தது முத்தையனிடமிருந்து தான் என்று திர்மானித்தான்; "மித்திரத்துரோகி நம்பிக்கை மோசம் செய்தபாதகன்—வஞ்சநெஞ்சம் படைத்த கிராதகன்—ஒழிந்ததே நல்லது. ஈசன் சரியான தண்டனை கொடுத்தான் இவனுக்கு" என்று அவனை வெறுத்தான்; அவன் எப்படி மரணமடைந்திருக்க வெண்டுமென்பது கருதி அவனை உற்று நோக்கினான். அவன் மேல் வெட்டுக்காயம் குத்துக்காயம் ஒன்றுமில்லை. ஆனால் பின் பக்கத்துக் கண்டைக்காலில் ஒரு குத்துச்சதை பிடுங்கப்பட்டிருந்தது. அது பாம்புக்கடியா யிருக்க வேண்டுமென்று

தெரிந்து தேகத்தை உற்று நோக்கினான்—தேகமெல்லாம் நீலம் பூத்திருந்தது—"ஓ இவன் பாம்பு கடித்துத்தான் இறந்திருக்கிறான். தொலையட்டும் துரோகி! எப்படி யிறந்தாலென்ன" என்று சொல்லிக்கொண்டே எழுந்தான்—எழுந்தவன் "இவன் நேற்று வரையில் நமக்கு உற்ற நண்பனாக இருக்கவில்லையா! அநியாயமாக இறந்து விட்டான். இவன் நமக்குத் துரோகம் செய்த போதிலும் பாம்பு விஷந் தீர்க்கும் பச்சை இலையினால் இவனைப் பிழைப்பிப்பதே நம் கடனாகும்", என்று கருதிப் பக்கத்துப் புதரிலிருந்த பச்சை இலையைக் கொண்டுவந்து கசக்கி அவன் மூக்கில் நச்யம் பிழிந்தான். சற்றுநேரத்தில் முத்தையன் கொஞ்சம் கண் விழித்தான்—மறுபடியும் மயக்கம் தட்டியது. குமரேசன் மறுபடியும் ஒரு முறை நச்யம் பிழிந்தான். —முத்தையன் நன்றாகக்கண் விழித்து "ஆ! குமரேசா," என்றான். குமரேசனும் அவனை ஆச்வாசப்படுத்தினான்; "பயப்படாதே" என்று தேறுதல் சொன்னான். இதற்குள் முத்தையனுக்குப் பூராவிஷமும் இறங்கி விட்டது. அவன் நன்றாகத் தெளிவடைந்து எழுந்து உட்கார்ந்தான். சுற்று முற்றும் பார்த்தான். முத்தையன் பார்க்கும்போதே 'இவன் புதையலைத்தான தேடுகிறான்' என்று குமரேசன் தீர்மானித்தான். தவிரவும் முத்தையன் இடுப்பில் சொருகிக் கொண்டிருந்த பிச்சுவாக்கத்தி குமரேசன் கண்ணிற் பட்டது. குண்டாந்தடியும் கீழே ஒரு புறமிருக்கக்கண்டான். கண்டதும் "ஓ தடியால் அடித்துக் கத்தியால் குத்தினான்" என்று காடன் சொன்னது இவனைதான்! சந்தேகம் ஒரு சிறிதுமில்லை" என்று உறுதிகொண்டான். (வரும.)

---

தமிழ்நா
11180

# பாலவிநோதினி

## குழந்தைகளின் அன்பன்

| | | |
|---|---|---|
| வருட சந்தா தபாற் கூலி யுள்பட | இந்தியா, பர்மா, சிலோன் ... | ரூ. 1 8 0 |
| | பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ... | ரூ. 2 0 0 |
| தனிச்சஞ்சிகை ... | ... விலை | ரூ. 0 2 0 |

1. பத்திரிகைக்கு ஜனவரிமீ முதல் டிசம்பர்மீ வரையில் ஒரு வருஷக்கணக்கு. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும். ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

3. சந்தாத்தொகையை முன்னடி செலுத்தியாவது அல்லது வி. பி. யில் கட்டியாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

4. வி.பி. யில் பெற்றுக் கொள்வதானல் அணு மூன்று அதிகமாய்ச் செலவாகிறபடியால் சந்தாத்தொகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம்மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை அறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

### விளம்பர விகிதம்

| | |
|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு | ...ரூபா 10—0—0 |
| அரைப் பக்கத்திற்கு ,, | ... ரூபா 5—0—0 |

காண்டிராக்ட் ரேட்டானல் சகாயமுண்டு.

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், சென்னை.

# அமிர்தாஞ்சனம்.

சர்வ நோய்களுக்கும் ஸித்த ஔஷதம்




விலை அணா 10 அணா 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங்செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோய்களுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்
சனமே. தலைவலி, முதுகுவலி, கீல்பிடிப்பு முத
லிய சகல நோய்களையும் நொடிப்பொழுதில் தீர்க்கும்.

## அமிர்தாஞ்சன் டிப்போ,

**7, தம்புச்செட்டி தெரு, சென்னை.**


Vavilla Press, Madras.